1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லே.

திரு. என். டென்னிஸ் : தலேவர் அவர்களே, அங்குள்ள பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 500-க்கு அதிகமாக இருக்கிறது. பக்கத்தில் அரசுப் பள்ளிகளும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதை நடுத்தரப் பள்ளியாக உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பற்றிய செயற்குறிப்பு பள்ளிக் கல்வி இயக்குநரிடத்திலோ அரசினிடத்திலோ வரவில்லே. முறைப்படி விண்ணப்பம் செய்து நிபந்தனேகளே நிறைவேற்றக்கூடிய நிலேமை இருந்தால் அரசு ஆராயும்.

சிற்பக்கலே பயின்றோர்க்கு வேலேவாய்ப்பு

*723 வினு :— திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் பயின்று முடித்த சிற்பக்கலே மாணவர்களுக்கு வேலேவாய்ப்பளிக்கும் சிறப்புத்திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லே.

திரு. வை. பாலசுந்தரம் : தலேவர் அவர்களே, பல்லவன் காலத்திலிருந்து இராஜேந்திர சோழன் காலம் வரையில் உயிர் ஓவியமாகத் திகழ்ந்த சிற்பக் கலே இடைக்காலத்திலே உயிர் இழந்து கலேஞர் அவர்கள் ஆட்சியில் மீண்டும் புத்துயிர் பெற்று இருக்கிறது. எதிர்காலத்திலே அது ஜீவன் இழக்காமல் இருக்க அதைக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பாடமாக வைக்க வேண்டிய அவசியம் இல்லே. பயிற்சி பெறுகிறவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 95 மாணவர்கள் பயிற்சி பெற்று இதுவரையில் வெளிவந்திருக்கிருர்கள். அவர்கள் இந்த மாநிலத்திலேயும் வேறு பல மாநிலங்களிலேயும் பணியாற்றி வருகிருர்கள். இப்போது திருவள்ளுவர் கோட்டம் பணியிலே பலபேர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள். டிகிரி ஆக்குவதன் மூலமாக அவர்கள் அந்தத் தொழிலே நடத்துவார்கள் என்று சொல்ல முடியாது, மேற்பார்வையாளராகவோ, கடிதம் எழுதுகிறவராகவோ வேறு

வேலையிலோதான் ஈடுபடுவார்கள். கையிலே உளியையும் சுத்தியலையும் வைத்துச் செதுக்குவார்களா என்பது சந்தேகம் தான். சான்றிதழ்கள் வழங்குவதன்மூலமாக அந்தக் கலை வளரும்.

திரு. கோ. இளங்கோவன் : சிற்பக்கலை பயில்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் பயில்கிறார்கள் ? இதுவரையில் படித்து வெளிவந்த மாணவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டு தோறும் 10 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சி ஒரு ஆண்டா இரண்டு ஆண்டா என்கிற விவரக் குறிப்பில்லை, தனிக்கேள்வி போட்டால் தரலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுகிற நேரத்திலே அவர்களுக்காக ஊதியமோ அல்லது உதவித் தொகையோ அளிக்கிறோம். அதைப் போல சிற்பக் கலை பயில்கிற மாணவர்களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறதா ? இல்லையென்றால் இனி மேலாவது உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏதோ ஊக்க ஊதியம் இருப்பதாக அறிகிறேன், விவரக் குறிப்பில்லை. தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. கு. காமாட்சி : இந்தச் சிற்பக் கலைக்குப் பழைய காலத்திலேயுள்ள மாதிரி உளியும் சுத்தியலும்தான் இப்போதும் இருக்கிறது. அதற்கு நவீன கருவிகள் ஏதாவது கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றிய விவரம் இல்லை.

ரப்பர் சாலைகள்

*724 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் முக்கியமான சாலைகளில் ரப்பர் சாலை அமைப்பது குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப் பட்டதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?